DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 91/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : அருண்குமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 26.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 26th February 2026.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது பெருங்கோட்டூரில் குடியிருந்து வருகிறேன். சாட்சி கடற்கரை என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதல்ல. என் முன்பாக போலீசார் சம்பவ இடம் எதையும் பார்வையிட்டு படம் எதுவும் வரைந்து கையொப்பம் எதுவும் பெறவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

07.05.2013 ம் தேதி மாலை 3.30 மணியளவில் நானும்,கடற்கரை என்பவரும் எங்கள் ஊர் வேதக்கோவில் முன்பாக நின்றுகொண்டிருந்தபோது

திருவேங்கடம் காவல் உதவி ஆய்வாளர் குற்ற எண்.82/2013 வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், கடற்கரை என்பவரும் கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

# DEPOSITION OF WITNESS 5
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 91/2024** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : திரு.சுரேஷ்குமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 26.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 26th February 2026.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆஜராகி தெரிவிக்கும் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பதிவுசெய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது வள்ளியூர் காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.05.2013ம் தேதி நான் திருவேங்கடம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் நிலையப்பொறுப்பில் இருந்த தலைமைக்காவலர் கண்ணன் என்பவர் பதிவுசெய்து வைத்திருந்த திருவேங்கடம் காவல்நிலையக்குற்ற எண்.82/2013 ச/பி.294(பி), 324, 506(2) இதச வழக்கை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்றேன். சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் சாட்சிகள் அருண்ராஜ், கடற்கரை முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வைமகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி**

**வரைபடம். அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் ஆசிர்வாதம், வேல்முருகன், முத்துமாடன், கணேசன் ஆகியோர்களையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த கண்ணன் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் சம்பவ இட விசாரணையிலிருந்தும், சாட்சிய விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகளான கருப்பசாமி, சப்பாணி ஆகியோரை அன்றைய தினமே கைது செய்து நீதிமன்றக்காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த சங்கரன்கோவில்அரசு மருத்துவமனை மருத்துவர் சுதா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்து காயச்சான்றிதழ் பெற்றேன். மேலும், திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நுண்கதிர் பிரிவு மருத்துவ அதிகாரியான ராஜா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று அளிக்கப்பட்டதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(பி), 324, 506(2) இதச விலிருந்து 294(பி), 324, 326, 506(2) இதச பிரிவுகளாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். அத்துடன் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனது விசாரணையில் சம்பவமானது 06.05.2013 ம் தேதி மதியம் 2 மணிக்கு நடைபெற்றதாக துலங்குமா என்றால் துலங்காது. எனது விசாரணையில் சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்திற்கு 07.05.2013 ம் தேதி மதியம் 2.15 மணிக்கு தகவல் கிடைத்ததாக துலங்குமா என்றால் துலங்காது. காவல்நிலையத்திற்கு சம்பவம் பற்றிய தகவல் 07.05.2013 ம் தேதி காலை 8 மணிக்கு கிடைத்தது. முதல் தகவல் அறிக்கையில் சம்பவமானது எந்த நாள் மற்றும் நேரத்தில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சம்பவமானது 06.05.2013 ம் தேதி மாலை 4 மணியளவில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்திற்கு எந்த நாள் மற்றும் நேரத்தில் தகவல் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 07.05.2013 ம் தேதி காலை 8 மணிக்கு

தகவல் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் 3 வது காலத்தில் காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் மற்றும் நேரமாக 07.05.2013 மற்றும் 14.15 மணி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 07.05.2013 ம் தேதி காலை 8 மணிக்கு மருத்துவமனையிலிருந்து சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்தது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த காயம்பட்ட நபரிடமிருந்து புகார் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை 07.05.2013 ம் தேதி மதியம் 2.15 மணிக்கு பதிவுசெய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் முன்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் மற்றும் நேரமும், அதே அறிக்கையில் பின்பக்கம் குறிப்பிடப்பட்டுள்ள நாள் மற்றும் நேரமும் முரணாக உள்ளன என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை நான் சரிவர பரிசீலிக்கவில்லை என்றாலும், அதனால் முறையாக விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனதுவிசாரணையில் காயம்பட்ட நபரான ஆசிர்வாதம் அவரது மனைவி பூமாரியுடன் சிகிச்சைக்கு சென்றதாக துலங்குமா என்றால் துலங்காது. நான் மருத்துவர் ராஜாவை விசாரித்தபோது காயம்பட்ட நபருக்கு எடுத்ததாக சொல்லப்படும் நுண்கதிர்படத்தை அவரிடமிருந்து பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேனா என்றால் இல்லை. நுண்கதிர்படத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காமல் வழக்கின் குற்றப்பிரிவுகளை மாற்றியமைத்து அறிக்கை தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. சிகிச்சை அளித்த மருத்துவரின் இறுதி கருத்துரையின் அடிப்படையில் வழக்கு பிரிவு மாற்றப்பட்டது. காயம்பட்ட நபர் ஆசிர்வாதத்திற்கு இறுதியாக சிகிச்சை அளித்த மருத்துவர் யார் என்றால் அது சம்பந்தமாக எனது விசாரணையில் விபரம் எதுவும் துலங்காது. ஆசிர்வாதத்திற்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் யார் என்றால் மருத்துவர் சுதா காயச்சான்றிதழை வழங்கினார். மருத்துவர் சுதா ஆசிர்வாதத்தின் நுண்கதிர்படத்தை பார்த்ததாக என் விசாரணையில் துலங்குமா என்றால் அது பற்றி குறிப்பிட்டு எனது விசாரணையில் துலங்காது. ஆனால் பொதுவாக காயம்பட்ட நபருக்கு பெறப்படும் மருத்துவ சான்றிதழை பார்த்தபிறகு காயச்சான்றிதழை ஒரு மருத்துவர் வழங்குவார். சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் ஆயுதம் எதையும் மருத்துவரிடம் காட்டி அது பொறுத்து கருத்துரை என்னால் பெறப்பட்டதா என்றால் இல்லை. சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் ஆயுதம் எதுவும்

கைப்பற்றப்படவில்லை என்றாலும், அவ்வாறு கைப்பற்றாததால்தான் அது குறித்து மருத்துவரிடம் கருத்துரை பெறவில்லை என்றாலும் சரிதான். காயம்பட்டதாக சொல்லப்படும் நபரின் ரத்தம் படிந்த உடையையோ அல்லது அவர் ரத்தம் படிந்த வேறுஏதேனும் பொருட்களையோ நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் விசாரணை காவல்நிலையத்திற்குள்ளே வைத்து முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறிய நாள் மற்றும் நேரத்தில் நான் கூறியவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும், நான் முதல் விசாரணையில் கூறியவாறு புகார் வாக்குமூலம் பதிவுசெய்யப்படவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும், நான் முதல்விசாரணையில் கூறியவாறு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், பட்டியல் சாட்சிகள் விசாரிக்கவில்லை என்றாலும், நான் முதல்விசாரணையில் கூறியவாறு மருத்துவர் விசாரிக்கப்பட்டு அவரிடமிருந்து காயச்சான்றிதழ் பெறவில்லை என்றாலும், எதிரிகளை நான் கூறியவாறு கைது செய்யவில்லை என்றாலும், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**